**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : செங்கேணி பழனி**

**நாள்: 17.08.2024** **நேரம் : மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் நாட்டில் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்க முடியும் என குடியரசு துணை தலைவர் திரு ஜக்திப் தன்கர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகள் எதிர் கொண்டு வரும் சவால்களை ஒருங்கிணைந்து முறியடிப்போம் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீருக்கு தேர்தல் அறிவிக்கப் பட்டிருப்பது வரவேற்கத் தக்கது என காங்கிரஸ் தேசிய மாநாட்டு கட்சி மற்றும் பிஜேபி உள்ளிட்ட கட்சிகள் தெரிவித்துள்ளன.

மருத்துவர்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஒலிம்பிக்கில் 2 வெண்கல பதக்கங்களை வென்ற மனுபாக்கருக்கு 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் வழங்கினார்.

தன்கர் 1 (15)

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் இன்று ஒரு நாள் அரசு முறை பயணமாக ஆந்திர பிரதேசத்தில் உள்ள நெல்லூர் மாவட்டத்திற்கு சென்றார். அவரை அம்மாநில ஆளுநர் திரு அப்துல் நசீர், நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு பொங்குரு நாராயணா, அறநிலையத்துறை அமைச்சர் திரு அனம் ராமநாராயண ரெட்டி மற்றும் அரசு அதிகாரிகள் வரவேற்றனர். பின்னர், அங்கிருந்து வெங்கடாசல சரஸ்வதி நகரில் அமைந்துள்ள அக்ஷர வித்யாலயா விற்கு சென்ற குடியரசு துணைத் தலைவர் அங்கு செயல்படுத்தப்பட்டு வரும் கல்வி முறை மற்றும் கற்பித்தல் முறைகள் குறித்து பள்ளி நிர்வாகிகளிடம் கேட்டறிந்தார். அங்கு நடத்தப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தையும் அவர் பார்வையிட்டார்.

தொடர்ந்து ஸ்வர்ண பாரத் அறக்கட்டளைக்கு சென்ற அவர், அறக்கட்டளையின் 23 ஆவது ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். நிகழ்ச்சியில் பேசிய அவர், உள்நாட்டில் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ள பொருட்களின் இறக்குமதியை குறைத்து உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என தொழில்துறையினரை கேட்டுக் கொண்டார்.

தன்கர் 2 (8)

உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் நாட்டில் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது, இந்திய தொழிலாளர்களுக்கு வேலை வழங்குவதோடு, தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும், இயற்கை வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கான தேவையையும் அவர் சுட்டிக் காட்டினார். நிதி அதிகாரத்தை விட தேவையின் அடிப்படையில் வளங்களை பயன்படுத்துமாறும் அவர் மக்களை கேட்டுக் கொண்டார்.

மோடி 1 (18)

சர்வதேச நாடுகள் எதிர் கொண்டு வரும் சவால்களை ஒருங்கிணைந்து முறியடிப்போம் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று உலகளாவிய தெற்கு நாடுகளின் குரல் அமைப்பின் 3 ஆவது உச்சி மாநாட்டை காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்து பேசினார். உலக நாடுகள் அசாதாரண சூழலை சந்தித்து வரும் இந்த வேளையில் மாநாடு நடைபெறுவதை அவர் சுட்டிக் காட்டினார். கொரோனா பாதிப்பில் இருந்து உலகம் இன்னும் முழுமையாக

மீளவில்லை என்றாலும், பருவ நிலை மாறுபாடு, சுகாதாரம், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு உள்ளிட்ட சவால்களை ஏற்கனவே சந்தித்து வருவதாக அவர் குறிப்பிட்டார். வர்த்தகம் உள்ளடக்கிய வளர்ச்சி, நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளின் முன்னேற்றம், மகளிர் தலைமையிலான மேம்பாடு போன்றவற்றை முன்னெடுத்து செல்ல மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். கட்டமைப்பு, மின்னணு எரிசக்தி இணைப்புகள் மூலம் தென்னாடுகள் இடையே ஒத்துழைப்பு மேம்பட்டு இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். சூரிய சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு தொடர்பாக நம்நாடு மட்டும் அல்லாமல், ஏனைய நட்புறவு நாடுகளும் பயனடைய இந்தியா உயர் முன்னுரிமை வழங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

மோடி 2 (16)

வர்த்தக மேம்பாட்டை வலுப்படுத்த இந்தியா 25 லட்சம் டாலர் நிதியை வழங்கும் என உறுதி அளித்த பிரதமர், வணிகம் தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சிகளுக்காக 10 லட்சம் டாலர் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதம் ஆகியவை தற்போதைய மாபெரும் அச்சுறுத்தல்களாக உள்ளதாக பிரதமர்

குறிப்பிட்டார். தொழில்நுட்பம் சார்ந்த பொருளாதாரம் மற்றும் சமூக சவால்கள் உலக நாடுகளுக்கு பெரும் சிக்கலாக இருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார். அதே நேரத்தில் கடந்த 10 ஆண்டுகளில் நிறுவப்பட்ட நிதி அமைப்புகள் இந்த நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் திறனை நமக்கு அளிக்கவில்லை என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இந்த உச்சிமாநாட்டில் உலக நாடுகள் எதிர் கொண்டு வரும் சவால்கள் உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு நெருக்கடி, பருவ நிலை மாற்றம் குறித்து விவாதிக்கப் பட்டு வருகிறது. முன்னதாக, உலகளாவிய தெற்கு நாடுகள் குரல் அமைப்பின் முதல் 2 கூட்டங்களும் இந்தியா சார்பில் நடத்தப்பட்டன. இதில், 100 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்று தங்கள் தரப்பு கருத்துக்களை பதிவு செய்தனர்.

மோடி 3 (7)

இந்த மாநாட்டில், வெளியுறவு அமைச்சர்கள் அமர்வில் பங்கேற்று பேசிய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், குறைந்த செலவி

ல் நிதியுதவி மற்றும் முக்கிய தொழில்நுட்பங்களின் செயல்பாட்டை எளிதாக்குவதற்கு உலகளாவிய தெற்கு நாடுகள் ஒரு குடும்பமாக இணைந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்.

உலகளாவிய தெற்கு நாடுகள், குறிப்பாக பல மோதல்கள், பல பதற்றங்கள் மற்றும் அழுத்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

மெட்ரோ (16)

நாட்டில் 3 புதிய மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 15 ஆயிரத்து 611 கோடி ருபாய் மதிப்பிட்டில், பெங்களூர் மெட்ரோவின் 3 ஆம் கட்டம், 12 ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவில் தானே ஒருங்கிணைந்த வட்ட மெட்ரோ திட்டம், 3 ஆயிரம் கோடி மதிப்பிலான புனே மெட்ரோ கட்டம் 1 திட்டம் ஆகியவை அடங்கும். புதுடெல்லியில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இதனை தெரிவித்துள்ளார். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு 5 நகரங்களில் மட்டுமே மெட்ரோ ரயில் சேவை இருந்ததாக தெரிவித்த அவர், தற்போது 21 நகரங்களில் மெட்ரோ ரயில் சேவை இயங்கி வருவதாக குறிப்பிட்டார். மெட்ரோ ரயில் திட்டங்கள் போக்குவரத்து நெரிசலை குறைப்பதுடன், முக்கிய இடங்களை இணைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். திரு நரேந்திர மோடி அரசு 3 ஆவது முறையாக பொறுப்பேற்ற பிறகு, இதுவரை 1 லட்சத்து 54 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவர்கள் போராட்டம் (19)

கொல்கத்தாவில், பெண் மருத்துவர் ஒருவர் கொலை செய்யப்பட்டதை கண்டித்து, நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, ஒரு குழு அமைக்கப்படும் என்றும், இக்குழுவில் மாநில அரசுகள் உட்பட அனைத்து பிரதிநிதிகளும், தங்கள் ஆலோசனைகளை வழங்க அழைக்கப் படுவார்கள் என்றும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இச்சம்பவத்தை தொடர்ந்து டெல்லியில் உள்ள அரசு மருத்துவ கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளின் மருத்துவர்கள் மற்றும் பிரதிநிதிகள் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தை சந்தித்துள்ளனர். கொல்கத்தாவில் உள்ள மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனைகளில் வசிக்கும் மருத்துவர்களை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்தனர். கோரிக்கைகளை கேட்டறிந்த அமைச்சகம் மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளது. நாட்டில் அதிகரித்து வரும் டெங்கு மற்றும் மலேரியா நோய்களை கருத்தில் கொண்டு மருத்துவர்கள் போராட்டத்தை கைவிட்டு, தங்கள் சேவையை மீண்டும் தொடங்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

தேர்தல் காஷ்மீர் (19)

ஜம்மு காஷ்மீருக்கு தேர்தல் அறிவிக்கப் பட்டிருப்பது வரவேற்கத் தக்கது என காங்கிரஸ் தேசிய மாநாட்டு கட்சி மற்றும் பிஜேபி உள்ளிட்ட கட்சிகள் வரவேற்றுள்ளன. ஜம்மு காஷ்மீருக்கு 3 கட்டங்களாக சட்டப்பேரவை தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. ஜம்மு காஷ்மீருக்கு தேர்தல் நடத்துவதை வரவேற்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், கடந்த 10 ஆண்டு கால பாஜக ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பயனாக அங்கு வளர்ச்சி, அமைதி மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான புதிய அத்தியாயம் உருவாக்கப் பட்டு இருப்பதாக அவர் பெருமிதம் தெரிவித்தார். இதற்கிடையே, தேர்தல் அறிவிப்பை வரவேற்பதாக பாஜக பொது செயலாளர் தெரிவித்துள்ளார். மேலும், இந்த தேர்தலில் தங்கள் கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இதே போல், கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சி தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறுவது நிச்சயம் என்றும் தெரிவித்துள்ளது. இந்த தேர்தலில் தங்கள் கட்சி போட்டியிடும் என தேசிய மாநாட்டு கட்சி தலைவர் திரு பருக் அப்துல்லா தெரிவித்துள்ளார். இதில் தான் போட்டியிட உள்ளதாகவும், அதே நேரத்தில், முன்னாள் முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா போட்டியிட மாட்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*பாஜக கூட்டம்* (7)

பாரதிய ஜனதா கட்சியின் தேசிய நிர்வாகிகள் கூட்டம் இன்று புதுடெல்லியில் நடைபெற்று வருகிறது. கட்சியின் தலைவர் திரு ஜேபி நட்டா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், கட்சியின் உறுப்பினர் சேர்க்கை, வரவிருக்கும சட்டமன்ற தேர்தலுக்கான தயார் நிலை ஆகியவை குறித்து விவாதிக்கப் பட்டது. இதில், கட்சியின் தேசிய நிர்வாகிகள், மாநில பொறுப்பாளர்கள் மற்றும் இணை பொறுப்பாளர்கள், மாநில பாஜக தலைவர்கள், மாநில செயலாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*மானுபாக்கர்* (14)

பாரீஸ் ஒலிம்பிக்கில் 2 வெண்கல பதக்கங்களை வென்ற மனு பாக்கருக்கு 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மத்திய துறைமுகம் மற்றும் கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் வழங்கினார். பாரீஸ் ஒலிம்பிக்கில் துப்பாக்கி சுடும் பிரிவில் 2 பதக்கங்களை வென்று இந்திய வீரர்களை பெருமை அடைய செய்த மனு பாக்கருக்கு புதுடெல்லியில் பாராட்டு விழா நடைபெற்றது. இந்த விழாவில் அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் பங்கேற்று காசோலையை வழங்கி கவுரவித்தார். நிகழ்ச்சியில் பேசிய அவர், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கப்

படுவதாக தெரிவித்தார். உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு விளையாட்டிற்கு சாதகமான சூழல் உருவாக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். துப்பாக்கி சுடும் போட்டியில் 2 பதக்கங்களை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்ற மனு பாக்கர் கப்பல் மாலுமியின் மகள் என்பது குறிப்பிடத் தக்கது.

*பாரா ஒலிம்பிக் (7)*

நாட்டில் மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு உரிய பயிற்சி மற்றும் வசதிகள் வழங்கப்பட்டு வருவதாக மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். பாரீசில் வரும் 28 ஆம் தேதி தொடங்கும் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் இந்திய வீரர்களை வழியனுப்பும் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகள் மூலம் ஊரக பகுதிகளில் உள்ள விளையாட்டு வீரர்கள் ஊக்குவிக்கப் படுவதாக தெரிவித்தார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் நாட்டில் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்க முடியும் என குடியரசு துணை தலைவர் திரு ஜக்திப் தன்கர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகள் எதிர் கொண்டு வரும் சவால்களை ஒருங்கிணைந்து முறியடிப்போம் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீருக்கு தேர்தல் அறிவிக்கப் பட்டிருப்பது வரவேற்கத் தக்கது என காங்கிரஸ் தேசிய மாநாட்டு கட்சி மற்றும் பிஜேபி உள்ளிட்ட கட்சிகள் தெரிவித்துள்ளன.

மருத்துவர்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஒலிம்பிக்கில் 2 வெண்கல பதக்கங்களை வென்ற மனு பாக்கருக்கு 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் வழங்கினார்.